**<u>மதுக்கரை நகராட்சியில் 28.12.2022ம் நாள் நடைபெற்ற அவசர மன்றக்கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்.</u>**

**மன்றப் பொருள் எண்.01**

மதுக்கரை நகராட்சியின் 1வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திருமதி. எஸ். உஷா–1, 2வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திருமதி. பி. சண்முகபிரியா–2, 3வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திருமதி. கே. சுந்தரி–3, 4வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திருமதி. கு. மலர்செல்வி –4 ஆகியோர்களின் 23.12.2022ம் நாளிட்ட கடிதத்தின் மூலம் மதுக்கரை நகராட்சி அறிவொளி நகரில் அரசு நடுநிலைப்பள்ளியில் 1 முதல் 5ம் வகுப்பு வரை 222 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள். இப்பகுதியில் வசிக்கும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த அனேக மாணவர்கள் இப்பள்ளியில் சேர்ந்து படித்து வருகிறார்கள் எனவும், இப்பகுதி வாழ் ஏழை மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை இப்பள்ளிக்கு கொண்டு வந்து உதவுமாறும் அதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மேற்காணும் கோரிக்கைகளை ஏற்று ஏழை மாணவ மாணவியர்களின் நலன் கருதி அறிவொளி நகர் அரசு நடுநிலைப்பள்ளியில் 1 முதல் 5 வரை கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தை செயல்படுத்த அரசுக்கு அனுமதி கோரி பரிந்துரை கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.809/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கான கூடுதல் செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.97</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.02**

கோயம்புத்தூர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அவர்களின் கடிதம் ந.க.எண்.4007/2022/ஆ2, நாள். 09.12.2022ம் நாளிட்ட கடிதத்தின் மூலம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022 – 23ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் திரு.செ.தாமோதரன், சட்டமன்ற உறுப்பினர், கிணத்துக்கடவு தொகுதி அவர்களின் பரிந்துரையின்படி கீழ்காணும் பணியை மேற்கொள்ள நிர்வாக அங்கீகாரம் வழங்கும் பொருட்டு மதிப்பீடு மற்றும் சான்றுகள் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | ஒதுக்கிட்டுத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | மதுக்கரை நகராட்சி 5வது வார்டு மலைச்சாமி கோவில் தெரு நியாய விலைக்கடை முதல் மயிலாத்தாள் வீடு வரையில் தார்சாலை அமைக்கும் பணி. | ரூ.10,00,000/– |

மேற்காணும் வேலையை செய்வதற்கு உரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு சரிபார்ப்பு சான்றுகளுடன் (Check list) நிர்வாக அனுமதி கோரும் கருத்துருக்களை அனுப்பிவைக்க கோரப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022–23ன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 5வது வார்டு மலைச்சாமி கோவில் தெருவில் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணியை மேற்கொள்ள உரிய கருத்துருவை கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பிவைத்து உரிய அனுமதி பெற்று மேற்காணும் வேலையை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2079/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.98</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.03**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண்.3473/2021/பி1, நாள். 14.11.2022 ன் படி நமக்கு நாமே திட்டம் 2022–23ம் ஆண்டிற்கு பொதுமக்களின் பங்களிப்புடன் பணிகள் தேர்வு செய்து முன்மொழிவுகள் அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி கீழ்காணும் பணியை மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | வேலையின் பெயர் | அரசு மான்யம் ரூபாய் (லட்சத்தில்) | பொது மக்கள் பங்கு ரூபாய் (லட்சத்தில்) | மொத்த மதிப்பீடு ரூபாய் (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | மதுக்கரை நகராட்சி 10வது வார்டு சுந்தராபுரம் ரோடு ராஜாமணி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் பகுதியில் உள்ள மண்சாலையை தார்சாலையாக மாற்றி அமைக்கும் வேலை மற்றும் வார்டு 23ல் தர்மராஜா நகர் மெயின் சாலை மற்றும் 1 வது குறுக்குச்சாலையில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 18.20 | 9.10 | 27.30 |

மேற்கண்ட வேலையின் மொத்த மதிப்பீடு ரூ.27.30 லட்சத்தில் மூன்றில் ஒருபங்கு ரூ.9.10 லட்சத்தினை பொது மக்களிடமிருந்து பங்களிப்பாக வசூலித்தும் அரசு மான்யம் ரூ.18.20 லட்சம் ஒதுக்கீடு பெற்றும் அதற்கான மொத்த மதிப்பீடு தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பிவைத்து உரிய அனுமதி பெற்று மேற்கண்ட வேலை செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1791/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.99</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.04**

மதுக்கரை நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், இரவு காவலர், அலுவலக உதவியாளர் மற்றும் குடிநீர் விநியோக பணியாளர்களுக்கு 2022–2023ம் ஆண்டிற்கு 161 எண்ணிக்கையிலான நகராட்சி பணியாளர்களுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சீருடை வழங்குவதற்கும், இதற்காகும் துணிகளை வாங்கி அவைகளை உரியவர்களுக்கு அளவு எடுத்து தைத்து கொடுப்பது உட்பட அனைத்திற்கும் உத்தேச செலவு ரூ.500000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்காணும் விபரத்திற்கு பணியாளர்களுக்குத் தேவையான துணிகளையும் தைத்து கொடுப்பதற்கு அரசு கூட்டுறவு நிறுவனமான கோவை மாவட்ட ஆயுத காவல்படை குடும்ப நல கூட்டுறவு சங்கத்தின் மூலம் மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினம் ரூ.479660/– ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1246 /2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பண்டிகை கால சீருடை வழங்குவதற்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் அதற்கான செலவினம் மேற்கொண்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.100</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அங்கீகரிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.05**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறை மன்ற நடுவத்தின் ஆணை 8/மா/2022 நாள்.08.08.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25084/2022/எச்1, நாள்.15.09.2022ன்படியும் உத்திரவிடப்பட்டுள்ளதற்கிணங்க மதுக்கரை நகராட்சி பகுதியில் பராமரிப்பின்றி சுற்றித்திரியும் தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும் தெருநாய்களின் தொல்லையால் பொதுமக்கள் மிகவும் அச்சத்துடன் வாழ வேண்டிய சூழ்நிலை உள்ளது. தெருநாய்களை அப்புறப்படுத்துவதற்கான வழிவகைகள் ஏதும் இல்லாததால் தெருநாய்களின் இனப்பெருக்கத்தை தடை செய்யும் பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது, மேற்காணும் விபரத்திற்கு தெருநாய்களின் இனப்பெருக்கத்தை தடை செய்யும் பணிக்கான நடவடிக்கை மேற்கொள்வதால் இதற்காகும் தோராய செலவினம், நாய் ஒன்றுக்கு ரூ.700/— வீதம் 475 நாய்களுக்கு ரூ.332500/—க்கான (ரூபாய் மூன்று இலட்சத்து முப்பத்தி இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே நாய்களுக்கு கருத்தடை செய்யும் பணியை விலங்குகள் நலவாரியத்தின் அனுமதி பெற்ற நிறுவனத்தின் மூலம் முறையாக மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1167/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.101**

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.06**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் 06.12.2022ம் நாளிட்ட ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தலின்படி மதுக்கரை நகராட்சி பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகள், பொதுக்கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்களில் நாப்கின் எரியூட்டும் இயந்திரங்கள் வாங்கி பொதுபயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டியுள்ளது. மேற்காணும் விபரத்திற்கு NAPKIN BURNER விநியோகிக்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒன்றின் விலை விகிதம் |
|---|---|---|
| 1 | AKD எண்டர்பிரைசர்ஸ்<br>காஞ்சிபுரம் | ரூ.49560/— |
| 2 | உத்சவ் டிரேடர்ஸ்<br>பூச்சியூர், NSN பாளையம்,<br>கோயம்புத்தூர | ரூ.55200/— |
| 3 | ரிஷி ஹார்டுவேர் & எலக்ட்ரிக்கல்ஸ்<br>ஊட்டி | ரூ.57500/— |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள ஏ.கே.டி எண்டர்பிரைசர்ஸ் நிறுவனத்தாரின் விலைவிகிதத்தை ஏற்றுக்கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1.50 லட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1955 /2022/அ1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.102**

அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.07

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட க.ச.எண்.275/2B1ல் 0.99 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திருமதி. மயிலாத்தாள் மற்றும் திருமதி. M. தமிழ்செல்வி ஆகியோருக்கு திட்ட அனுமதி எண்.50/2020 என எண்ணிடப்பட்டு ம.வ (கோ.உ.தி.கு) எண்: 36/2020ன்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் பொது ஒதுக்கீடு மற்றும் ரோடு தான செட்டில்மெண்ட் ஆகியன மதுக்கரை சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண்.8179/2019 நாள்.23.12.2019ன்படி 1429.15 சதுர மீட்டர் விஸ்தீரணம் உள்ள சாலை பரப்பும், 19.35 சதுர மீட்டர் பரப்பு கொண்ட பொது ஒதுக்கீடு இடமும் நகராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் சாலைகள் தார்சாலைகளாகவும், அடிப்படை வசதிகளான வடிகால், சிறுபாலங்கள், தெருவிளக்கு மற்றும் குடிநீர் குழாய் வசதிகள் ஏற்படுத்தவும் உரிய கட்டணங்கள் வசூலித்து மனைப்பிரிவு இறுதி உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1007/2019/அ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றத்தில் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.103**

அங்கீகரிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.08

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட க.ச.எண்.1279/6ல் (பழைய க.ச.எண்.146, 147/1A1, 147/1A2, 152/1B) 0.887 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு. P.T. தோமஸ் என்பவருக்கு திட்ட அனுமதி எண்.437/2022 என எண்ணிடப்பட்டு ம.வ (கோ.உ.தி.கு) எண்: 371/2022ன்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் பொது ஒதுக்கீடு மற்றும் ரோடு தான செட்டில்மெண்ட் ஆகியன மதுக்கரை சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண்.8417/2022 நாள்.12.10.2022ன்படி

1128.64 சதுர மீட்டர் விஸ்தீரணம் உள்ள சாலை பரப்பும், 27.27 சதுர மீட்டர் பரப்பு கொண்ட பொது ஒதுக்கீடு இடமும் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு 27.32 சதுர மீட்டர் இடமும் நகராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் சாலைகள் தார்சாலைகளாகவும், அடிப்படை வசதிகளான வடிகால், சிறுபாலங்கள், தெருவிளக்கு மற்றும் குடிநீர் குழாய் வசதிகள் ஏற்படுத்தவும் உரிய கட்டணங்கள் வசூலித்து மனைப்பிரிவு இறுதி உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2238 /2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றத்தில் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.104**

அங்கீகரிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.09**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட க.ச.எண்.8/2ல் 1.28 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திருமதி. ரீத்தாதேவி மற்றும் திரு. ஜோசப் ஜெயசிங் ஆகியோருக்கு திட்ட அனுமதி எண்.505/2022 என எண்ணிடப்பட்டு ம.வ (கோ.உ.தி.கு) எண்: 429/2022ன்படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் பொது ஒதுக்கீடு மற்றும் ரோடு தான செட்டில்மெண்ட் ஆகியன மதுக்கரை சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண்.9920/2022 நாள்.28.11.2022ன்படி 1688.78 சதுர மீட்டர் விஸ்தீரணம் உள்ள சாலை பரப்பும், 19.05 சதுர மீட்டர் பரப்பு கொண்ட பொது ஒதுக்கீடு இடமும் நகராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் சாலைகள் தார்சாலைகளாகவும், அடிப்படை வசதிகளான வடிகால், சிறுபாலங்கள், தெருவிளக்கு மற்றும் குடிநீர் குழாய் வசதிகள் ஏற்படுத்தவும் உரிய கட்டணங்கள் வசூலித்து மனைப்பிரிவு இறுதி உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2239/2022/அ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றத்தில் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.105**

ஒத்திவைக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.10**

மதுக்கரை நகராட்சியில் 2022–2023ம் ஆண்டில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து தர கோரி கீழ்காணும் விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி | விண்ணப்பித்த நாள் | சால்வன்சி மதிப்பு ரூபாய் | ஒப்பந்ததாரர் வகுப்பு |
|---|---|---|---|---|
| 1 | M/s. ஓம் சாய் ராம் டிரேடிங் கம்பெனி<br>க.ச.எண்.1053/2A<br>குரும்பபாளையம் ரோடு,<br>மதுக்கரை,<br>கோயம்புத்தூர்–641105 | 23.11.2022 | ரூ.1200000/– | வகுப்பு-IV |

அரசாணை நிலை எண்.37, பொதுப்பணிகள் (ஜி2) துறை நாள்.17.06.2022ன்படியும், மேற்கண்ட விண்ணப்பத்தினை நகராட்சி ஒப்பந்தப்பதிவு விதிகளுக்கு உட்பட்டு நகராட்சி ஒப்பந்ததாரர்களாக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1829/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.106**

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.11**

அரசாணை நிலை எண். 158, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.02.11.2022ன் படி நகராட்சிகளில் பொறியியல் பிரிவு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் அதிகாரம், ஒப்புந்தப்புள்ளிகளை ஏற்பளிப்பு செய்யும் அதிகாரம், நிர்வாக அனுமதி வழங்கும் அதிகாரம், பொது பணிகளுக்கான தொழில் நுட்ப அங்கீகாரம் மற்றும் அளவீடுகளை சரிபார்க்கும் அதிகாரம் பொது பணிகளை கண்காணிக்கும் அதிகாரம் மற்றும் பொது வேலைகளுக்கு ஒப்புதல் வழங்கும் அதிகாரம் உள்ளிட்ட பல்வேறு நிலைகளிலான அங்கீகாரம் குறித்து அனுமதி வழங்கப்பட்டுள்ள அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1943/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.107**

மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.12**

**1920**ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு **15**ன் கீழ் செயலாட்சி அதிகாரியின் நெருக்கடிகால அதிகாரங்களின்படி அவசர அவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் வேலை விபரப்பட்டியல்கள்

| வரிசை. எண் | அவசர அவசிய பொது வேலைகள் விபரம் | செலவினத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | மதுக்கரை நகராட்சி **11**வது வார்டு சுப்பிரமணியர் வீதியில் உள்ள பொதுகழிப்பிடத்தின் செப்டிக் டேங்கிலிருந்து வெளியேறும் கழிவுநீர் குழாய் பழுதாகியிருந்ததை முழுவதுமாக மாற்றி புதிதாக பிவிசி **6"** பைப்கள் வாங்கி பொருத்திய வகையில் கூலி உள்பட செலவினம் மேற்கொள்ளப்பட்டது. | **ரூ.23600/–** |
| 2 | மதுக்கரை நகராட்சி **3**வது வார்டு அம்பேத்கார் சதுக்கம் பகுதியில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்காக கட்டப்பட்ட கழிப்பறைகள் பயன்படுத்த இயலாத நிலையில் பழுது ஏற்பட்டிருந்தது. இப்பகுதி நகர் மன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று பொதுமக்களுக்கு அவசர அவசியமாக இயற்கை உபாதைக்கான ஏற்பாடுகள் செய்யும் பொருட்டு கழிப்பறைகள் மராமத்து பணிகள் மேற்கொண்டதற்கான செலவினங்கள் மேற்கொண்டது. | **ரூ.60220/–** |
| 3 | மதுக்கரை நகராட்சி **14**வது வார்டு காந்தி நகர் முதல் மற்றும் இரண்டாவது தெரு பகுதியில் குடிநீர் விநியோகம் சரிவரசெல்லாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். பொதுமக்களுக்கு அவசர அவசியமாக குடிநீர் வழங்கும் பொருட்டு மேற்படி பகுதிகளில் புதியதாக **3"** பிவிசி குழாய் பதிப்பதற்கான கூலி உள்பட செலவினம் மேற்கொள்ளப்பட்டது. | **ரூ.32000/–** |
| 4 | மதுக்கரை நகராட்சி **13**வது வார்டு தண்டபாணி தோட்டம் வஞ்சியம்மன் கோவில் வீதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் பொதுக்கழிப்பிடங்களில் கேட் அமைக்க வேண்டியிருந்தது. மேற்படி கழிப்பிட கட்டிடங்களுக்கு கேட் அமைத்து இரண்டு பொதுக்கழிப்பிடங்களுக்கும் தரை அமைத்து கொடுத்ததற்கான கூலி உள்பட செலவினம் மேற்கொள்ளப்பட்டது. | **ரூ.21500/–** |
| 5 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட **20** வது வார்டு செட்டிபாளையம் பிரிவு பஸ் நிறுத்தம் அருகில் கழிவுநீர் கால்வாய் பழுதடைந்து பொதுமக்கள் சிரமப்படுகின்றனர்.எனவே அவசர அவசியம் கருதி பொதுமக்கள் நலனுக்காக கழிவுநீர் கால்வாய் சரிசெய்ததற்கு கூலி உட்படசெலவுகள் மேற்கொண்டது. | **ரூ.32967/–** |
| 6 | மதுக்கரை நகராட்சியில் **7** வது வார்டு குரும்பபாளையம் அரசு துவக்கப்பள்ளியில் சமையல் கூடத்திலிருந்து வெளிவரும் கழிவுநீர் நுழைவாயிலில் செல்வதால் மாணவர்களுக்கு சிரமமாக உள்ளது. எனவே பள்ளி மாணவர்களின் நலன் கருதி கழிவுநீர் கடத்த பைப் அமைத்து கூலி உள்பட செலவினங்கள் மேற்கொண்டது. | **ரூ.18315/–** |

| | | |
|---|---|---|
| 7 | மதுக்கரை நகராட்சியில் 15வது வார்டு காந்தி நகர் வடக்கு பகுதியில் உப்புநீர் இல்லாமல் பொதுமக்கள் சிரமப்படுகின்றனர் எனவே பொதுமக்கள் நலன் கருதி 2''PVC பைப்லைன் அமைத்து கொடுத்ததற்கு செலவினங்கள் மேற்கொண்டது. | ரூ.15840/– |
| 8 | மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு 25 பாலத்துறை மெயின் ரோடு பகுதியில் புதர் மண்டி கிடந்து, கிணறு இருந்ததால் அதனை தூய்மைபடுத்த கூலி வேலை ஆட்கள் வைத்து வேலை செய்தமைக்கு கூலி உள்பட செலவினங்கள் மேற்கொண்டது. | ரூ.12375/– |

பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட விபரத்திற்கான அவசர அவசியப் பணிகளை உடனடியாக செய்து முடித்தமைக்கும் அதற்கான செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து பட்டுவாடா செய்தமைக்கும் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.877/2022/அ1)

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றத்தில் பதிவு செய்யலாம்.

<u>**தீர்மானம் எண்.108**</u>

மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.13**

மதுக்கரை நகராட்சியின் 18வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.எம்.நடராஜன் அவர்களின் 02.12.2022ம் நாளிட்ட கடிதத்தில் மரப்பாலம் அண்ணாநகர் பகுதியில் குடிசை வாழ் மக்கள் 150 குடும்பத்தினர்கள் வசிப்பதாகவும், இப்பகுதி மக்களுக்கு பொது கழிப்பறை வசதி இல்லாததால் மிகவும் சிரமப்படுகிறார்கள் எனவும், இப்பகுதி வாழ் மக்களுக்கு பொது நவீன கழிப்பறை ஒன்று கட்டித்தர ஆவண செய்யுமாறும் கோரிக்கை வைத்துள்ளார்.

இதற்கிடையில் நகராட்சியின் ஒப்பந்ததாரர் திரு.டி.ஜெயக்குமார், பொறியாளர் அவர்களின் 23.12.2022ம் நாளிட்ட கடிதத்தின் மூலம் மதுக்கரை நகராட்சி 18 வது வார்டு மரப்பாலம் அண்ணா நகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் ஆண், பெண் இருபாலருக்குமாறு நவீன கழிப்பறையினை ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் சொந்த செலவில் கட்டி கொடுப்பதாக சம்மதக்கடிதம் கொடுத்துள்ளார்.

மேற்காணும் விபரத்திற்கு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சொந்தச் செலவில் திரு.டி.ஜெயக்குமார் அவர்களால் கழிப்பறை கட்டி கொடுப்பதற்கும் அன்னாருக்கு பாராட்டு தெரிவிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1930/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தனது சொந்த செலவில் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் நவீன கழிப்பாறை கட்டிக்கொடுக்க முன்வந்துள்ள பொறியாளர் திரு. டி.ஜெயக்குமார் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் அன்னாரின் சிறப்பான தொண்டினை மன்றத்தில் பராட்டு தெரிவிக்கலாம்.

**தீர்மானம் எண்.109**

1. அனுமதிக்கப்பட்டது.
2. பொறியாளர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களுக்கு மன்றத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

(ஒ/ம்) நா. நூர்ஜஹான்
நகர் மன்றத்தலைவர்
மதுக்கரை நகராட்சி

இடம் : மதுக்கரை
நாள் : 28.12.2022

---

//உண்மை நகல் உத்திரவுபடி//

ஆணையாளர்
மதுக்கரை நகராட்சி